*கவனிக்க.– 2021.01.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2210 - 2020 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2021.01.08
2210 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 154 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 157 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.–** *ஸ்ரீ சாக்கிய சிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, சனவரி மாதம் 08 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, சனவரி மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

153 - B 82093 - 5403 (2021/01)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர்* : நெரேட்டிவ் டிசைன் (பீவீடி) எல்டிடீ
*கம்பனி பதிவு இல.* : பீவீ 00231784
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2020.12.15
*பதிவு முகவரி* : 14/2C, பமுனவ, மஹரகம, 10280

Ms. கே.ஏ.டீ.நிமாஷி ருக்ஸலா,
கம்பனிச் செயலாளர்.

*1- 363*

---

## பொது அறிவித்தல்

**ட்ரான்ஸ்நஷனல் லங்கா (பீவீடி) எல்டிடீ PV5087 [முன்னர் ட்ரான்ஸ்நஷனல் லொஜிஸ்டிக்ஸ் சொலூசன்ஸ் லங்கா (பிறைவட்) லிமிடட்]**

இல. 160/16, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு -05.

*இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 60 நாட்கள் காலவதியாகிய பின்னர், அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனத்தின் தற்போதைய பெறுமதியாகிய 65, 823, 070 ரூபாவிலிருந்து 10, 523, 131 ரூபாவாக 2019.06.30 ஆந் திகதியன்று முன்கொண்டுவரப்பட்ட நஷ்டங்களை பதிவழிப்பதற்காக ஒரு விஷேட தீர்மானமொன்று கம்பனியின் அங்கத்தினர்களினால் அங்கீகரிக்கப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 59(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.*

*சபையின் கட்டளைப் பிரகாரம்,*

பி டபிள்யூ கோப்பரேட்
செக்கிரட்ரேரியல் (பீவீடி)
எல்டிடீ,
[முன்னைய செயலாளர்கள்
முகாமையாளர்கள் மற்றும்
செயலாளர்கள் (பிறைவட்)
லிமிடட்,]

ட்ரான்ஸ்நஷனல் லங்கா (பீவீடி) எல்டிடீ
[முன்னர் ட்ரான்ஸ்நஷனல் லொஜிஸ்டிக்ஸ் சொலூசன்ஸ் லங்கா (பிறைவட்) லிமிடட்]

*1- 410*

---

## பொது அறிவித்தல்

**லொட்ஸ் போ ஹன்ட்றட் என்ட் பிப்ரி சிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீ வீ 94800) புளோறி வில்லா (பிறைவேட்) லிமிட்டட் (பீ வீ 73824) மாயா லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 72036) மற்றும் ட்றஸ்ட் இன்வெஸ்ட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் (பீ வீ 78617) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு**

மேலே உள்ள நிறுவனங்களின் பணிப்பாளரின் தீர்மானங்களின் படி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கமைவாக லொட்ஸ் போ ஹன்ட்றட் பிப்ரி சிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், புளோறி வில்லா (பிறைவேட்) லிமிட்டட் , மாயா லங்கா (பிறைவேட்) லிமிட்டட், மற்றும் ட்றஸ்ட் இன்வெஸ்ட் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிறுவனமாக அதாவது லொட்ஸ் போ ஹன்ட்றட் அன்ட் பிப்ரி சிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்கின்ற பெயரில் தொடர்ந்தும் செயற்படும்.

மேற்படி ஒன்றிணைப்பானது, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்படும் குறிக்கப்பட்ட திகதி ஒன்றிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது.

லொட்ஸ் போ ஹன்ட்றட் பிப்ரி
சிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
புளோறி வில்லா (பிறைவேட்)
லிமிட்டட் ,
மாயா லங்கா (பிறைவேட்)
லிமிட்டட், மற்றும் ட்றஸ்ட்
இன்வெஸ்ட் இன்டர்நஷனல்
(பிறைவேட்) லிமிட்டட் .

பணிப்பாளர்.

*1- 415*

---

## பொது அறிவித்தல்

**வான் அம்ஸ்ரடாம் அன்ட் மிலன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 69823) மற்றும் எலியொட் பங்கிளோ (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 70226) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

*மேலே உள்ள நிறுவனங்களின் பணிப்பாளரின் தீர்மானங்களின் படி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கமைவாக வான் அம்ஸ்ரடாம் அன்ட் மிலன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட், மற்றும் எலியொட் பங்கிளோ (பிறைவேட்)*

லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிறுவனமாக அதாவது வான் அம்ஸ்ரடாம் அன்ட் மிலன் இன்வெஸ்ட்மன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்கின்ற பெயரில் தொடர்ந்தும் செயற்படும்.

மேற்படி ஒன்றிணைப்பானது, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்படும் குறிக்கப்பட்ட திகதி ஒன்றிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது.

வான் அம்ஸ்ரடாம் அன்ட் மிலன்
இன்வெஸ்ட்மன்ட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
மற்றும் எலியொட் பங்கிளோ
(பிறைவேட்) லிமிட்டட்

1- 416

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கு அமைவாக கம்பனி ஒன்றின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்படுவது தொடர்பாக பின்வரும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

*நிறுவனத்தின் பெயர்* : பீச் எஸ்கேப் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவு இலக்கம்* : பீவீ 85431

*பதிவு செய்யப்பட்ட முகவரி* : செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்,

கம்பனி செயலாளர்கள் ,

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

குறைக்கப்படுவதற்கு முன்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ.4,871,000
குறைக்கப்பட்ட பின்பு கூறப்பட்ட மூலதனம்: ரூ.101
குறைக்கப்பட்ட தொகை: ரூ. 4, 870,899

செக்றிடேறியல் ஹவுஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,

கம்பனி செயலாளர்கள் ,

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

1- 417

---

## பொது அறிவித்தல்
## அக்ஸ்டார் பிஎல்சி உடன் அக்ஸ்டார் புரப்பட்டீஸ் (பிறைவட்) லிமிட்டெட் இன் ஒன்றிணைப்பு

சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் அக்ஸ்டார் பிஎல்சி உடன் ( கம்பனி பதிவெண் PV 1618PB/ PQ) அக்ஸ்டார் புரப்பட்டீஸ் ( பிறைவட்) லிமிட்டெட் ( கம்பனி பதிவெண் PV 84941) ஒன்றிணைப்பிற்காக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட( சட்டம் என அழைக்கப்படும்) 244 ஆம் பிரிவின் (3) (டி) ஆம் உப பிரிவின் பிரகாரமான பொது அறிவித்தல்.

2020, யூலை 6 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்டு தினமின, தினகரன் மற்றும் டெயிலி நியுஸ் ஆகிய பத்திரிகைகளில் கொழும்பில் விநியோகிக்கப்பட்டதும் மேலேயுள்ள விடயம் தொடர்பாக அரசாங்க வர்த்தமானியில் 2020, யூலை 24 ஆந் திகதியன்று பிரசுரிக்கப்பட்டதும் அக்ஸ்டார் பிஎல்சி உடன் அக்ஸ்டார் புரப்பட்டீஸ் ( பிரைவட்) லிமிட்டெட் இன் ஒன்றிணைப்பிற்காக பிரசுரிக்கப்பட்ட முன்னைய உத்தேசிக்கப்பட்ட ஒன்றிணைப்பு அறிவித்தல் தொடர்பாக, ஒன்றிணைப்பானது இப்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் ஒன்றிணைப்பின் செயல்வலுப்பெறும் திகதியானது ஒன்றிணைப்புச் சான்றிதழில் வழங்கப்பட்டுள்ளவாறான 2020, ஒற்றோபர் 12 ஆந் திகதியாகும் என நாம் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம்.

அக்ஸ்டார் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரமானது

P.R.செக்கிறடேரியல் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2020, திசெம்பர் 8.

1- 329

---

## பொது அறிவித்தல்

## ஸியெரா ஃபார்மசியூட்டிகல் ( பிறைவட்) லிமிட்டட் மற்றும் எஸ் ஈ டிஸ்ரிபியூட்டர்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் மற்றும் எஸ் ஈ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் ( பிறைவட்) லிமிட்டடை ஸியெரா ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்டுடன் ஒன்றிணைத்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (குறித்த சட்டம்) 242 ஆவது பிரிவின் (3)(b) 24 பிரிவு பிரகாரம் இத்தால் பொது அறிவித்தல் விடுக்கப்படுவதாவது, குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஸியெரா ஃபார்மசியூட்டிகல் ( பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பிவீ 4052 ) மற்றும் எஸ்.ஈ.டிஸ்ரிபியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் ( கம்பனி பதிவிலக்கம் பிவீ 8399) ஸியெரா ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டட்டுடன் ( கம்பனி பதிவிலக்கம் பிவீ 4811) ஒன்றிணைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஸியெரா ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டட்டிற்கு முழுவதும் உரித்தான அதன் இணை நிறுவனங்களான ஸியெரா ஃபார்மசியூட்டிகல்

(பிறைவட்) லிமிட்டட் மற்றும் எஸ் ஈ டிஸ்ரிபியூட்டார்ஸ் (பிறைவட் ) லிமிட்டட்டின் பணிப்பாளர்கள் சபையானது 2020, திசெம்பர் 30 ஆந் திகதி ஸியெரா ஃபார்மசியூட்டிகல் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் எஸ்.ஈ.டிஸ்ரிபியூட்டர்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்டை ஸியெரா ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டட்டுடன் ஒன்றிணைப்பதற்கான தீர்மானம் மேற்கொண்டதுடன் ஸியெரா ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் நிலைத்து, ஸியெரா ஃபார்மசியூட்டிகல் மற்றும் எஸ் ஈ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டட்டின் இருப்பு முடிவுறுத்தப்படும்.

குறித்த சட்டத்தின் 243 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களுடன், உத்தேச ஒன்றிணைப்புச் சான்றிதழ் தொடர்பாக, கம்பனி பதிவாளர் நாயகத்திடம் ஒரு கோவை திறக்கப்பட்டு, ஸியெரா ஃபார்மசியூட்டிகல் (பிறைவட்) லிமிட்டட், எஸ் ஈ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் ஸியெரா ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் தொடர்பாக, குறித்த சட்டத்தின் 242(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி பதிவாளர் நாயகத்தால் ஒன்றிணைப்பு சான்றிதழ் வழங்கப்படுவதன் மூலம், இந்த அறிவித்தல் திகதியிலிருந்து 20 நாட்களுக்கு குறையாத தினமொன்றில் குறித்த ஒன்றிணைப்பானது செயல்வலுப்பெறும்.

குறித்த சட்டத்தின் 242(4)ஆம் பிரிவின் பிரகாரம் ஸியெரா ஃபார்மசியூட்டிகல் (பிறைவட்) லிமிட்டட், எஸ் ஈ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவட்) லிமிட்டட் மற்றும் ஸியெரா ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டின் சபைகளால் ஒன்றிணைப்பு அங்கீகரிக்கப்பட்டமை தொடர்பாக தீர்மானம் அடங்கியுள்ளதாகக் கருதப்படும் உத்தேச ஒன்றிணைப்பின் பிரதிகளை, வழமையான அலுவலக நேரங்களில், கொழும்பு 07, கிறகரிஸ் வீதி, இல. 59, பி.ஆர்.செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட், கம்பனிக்கான செயலாளர்களின் அலுவலகத்தில், கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனிக்கு கடப்பாடுடைய எந்தவொரு நபரினதும் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கம்பனிக்கு ஒரு வேண்டுதலை சமர்ப்பிப்பதன் மூலம் கம்பனியின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடனாளி அல்லது கம்பனிக்கு கடப்பாடுடைய எந்தவொரு நபரும், ஒன்றிணைப்புப் பிரேரணையின் பிரதியொன்றை இலவசமாய் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையோர் ஆவார்கள்.

ஸியெரா ஃபார்மசியூட்டிகல்
(பிறைவட்) லிமிட்டட்,
எஸ் ஈ டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
(பிறைவட்) லிமிட்டட், மற்றும்
ஸியெரா ஹோல்டிங்ஸ்
(பிறைவட்) லிமிட்டெட்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,

P.R.செக்கிறடேரியல் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2020, திசெம்பர் 6.

1- 330

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 08, காசல் வீதி, 168 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும், தற்போது ஐக்கிய அமெரிக்க நாடுகள், விஸ்கொன்சின், WI 53158, பிலெசென்ட் பிரியாரி, 48 ஆவது அவனியூ, 10143 இல் உள்ளவரும் லாணு சந்திமா குணவர்தன எனவும் அறியப்படுபவருமான லாணு குணவர்தன ஆகிய நான், (இலங்கைப் பிரசாவுரிமைச் சான்றிதழ் 0800074553 மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் கடவுச்சீட்டு இல. 566437059) பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ்.பி. களத்துவாவ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.02 ஆந் திகதிய 2937 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தின் மூலம் கொழும்பு 8, காசல் வீதி, 168ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஷாந்தனி குணவர்தன என்பவருக்கு ( தே.அ.அ.இல. 407561198 V) என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2020, நவெம்பர் 25 ஆந் திகதியிலிருந்து நான் இல்லாதொழித்து இரத்துச் செய்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

2020, நவெம்பர் 25.

லாணு சந்திமா குணவர்தன எனவும்
அறியப்படுபவருமான லாணு குணவர்தன.

.

1- 292

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 216/8சி, சிசில கார்டன்ஸ், தெஹிவளை வீதி, மஹரகம என்ற முகவரியைச் சேர்ந்தவரும் தற்போது 6626 Ventura Canyon Avenue, Van Nuys, CA 91401, USA என்ற முகவரியில் வசிப்பவருமான அந்தோணி பதுகே லால் சில்வா ஆகிய நான், 2017.02.08 ஆந் திகதியிடப்பட்டதும் 4519 என்ற இலக்கத்தைக் கொண்டதும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி.ஜே. சேமரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் பிலியந்தல, வேவல, தேவாலய வீதி, 12/ 10 என்ற இலக்கத்தைச் சேர்ந்த அந்தோணி பதுகே ரவிந்திர பிரியந்த சில்வா என்பவரை எனது அற்றோணித் தத்துவக்காரராக இலங்கையில் நியமனம் செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து மற்றும் இல்லாதொழித்துள்ளேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன். இதன் பின்னர், மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவகாரரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடு அல்லது விடயத்திற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

A.B.L. சில்வா .

1- 298

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கடவத்தை, கஜுஹேணவத்த, இல. 485, உப்பேக்கா ரெண்டி இரேஷா விக்கிரமசிங்ஹ ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்வதாவது, ஜா-எல, வெலிகம்பிட்டிய, நீதிமன்ற வீதி, இல. 15/8/9 ஐச் சேர்ந்த, டிலான் ஏரன்க உதான விக்கிரமசிங்க எனும் பெயரிலான, இல. 979, 2018.07.15 ஆந் திகதிய சட்டத்தரணி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. சீ. எஸ். அபயவீரவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மற்றும் கம்பஹா காணிப்பதிவு அலுவலகம், மேலதிக உதவிப் பதிவாளர் நாயகத்தால் பராமரிக்கப்படும் எழுத்து மூல அதிகாரங்கள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட, அத்தியாயம் 248, இருமடித்தாள் 124, பதிவு ( Entry) 15858 உடைய அற்றோணித் தத்துவம் இல்லாதொழிக்கப்பட்டது என்பதாகும்.

யூ. ஆர். ஐ.விக்ரமசிங்க.

1- 409

---

# ஏல விற்பனைகள்

## டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**DFCC வங்கி PLCஇன் பகிரங்க ஏலவிற்பனை**

**DFCC வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டேபொல ஆரச்சிலாகே உபாலி சோமவீர என்பவர் கடப்பாடுடையவர்களாக D.F.C.C. வங்கி PLCசார்பாக பிரசித்த நொத்தாரிசு சிரிபால ரனதுங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4701 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் D.F.C.C. வங்கி PLC க்கு ஈடு வைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.**

**2021.02.12 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**மேற்குறிப்பிட்ட 4701 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் ஈடு வைக்கப்பட்ட ஆதனம்**

பொலநறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மெதிரிகிரிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சிங்ஹலபத்துவ இல. 71C வெஹெரகல கிராம அலுவலர் பிரிவு சன்சுன்கம கிராமத்தில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் W.A. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.08.11 ஆந் திகதிய 1001/17 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 02 ஏக்கர், 01 றூட், 15 பேர்ச் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.**-ஹிங்குரக்கொடை நகரத்திலிருந்து விமான நிலைய பாதையில் பிங்பாதை சந்தி வரை வந்து பிங்பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் புத்தயாய பாதை வரை வந்து புத்தயாய பாதையில் சுமார் 5.5 கி.மீ. தூரம் 21 ஆம் சந்தி வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பியதும் சந்திக்கும் மணற் பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2020.10.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2020.10.20 ஆந் திகதிய திவயின, த ஐலன்ட் மற்றும் 2020.10.21 ஆந் திகதிய தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1500 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** முகாமையாளர், சட்டப் பிரிவு டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ , இல.73, டபிள்யு.ஏ.டி இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 011-2 371 371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595/ 071- 8446374/071-4962449.

1- 156

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

### பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

மிகவும் பெறுமதியுடைய சகல வசதிகளையும் கொண்ட சொத்து. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு கோரளைக்குட்பட்ட, மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாத்தறை மாநகர சபை எல்லைக்குட்பட்ட வல்கம தெற்கு கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, வல்கம மற்றும் வரிப்பண இல. 647/4 - அநகாரிக்க தர்மபால மாவத்தை எனும் இடத்தில் அமைந்துள்ள கந்தேகெதர வத்த எனும் ஒன்றிணைக்கப்பட்ட லொட் A.D.E மற்றும் லொட் B, லொட் 1 லொட் 1A எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். ஜே. சமரபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 3368 ஆம் இலக்க 2013.03.05 ஆந் திகதிய வரைபடத்தில் "லொட் 08" (அத்துடன் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச்.ஜே. சமரபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 775 ஆம் இலக்க 1996.12.12 ஆந்திகதிய வரைபடத்தில் "லொட் 08") என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், பயிர்செய்கைகள், மற்றும் சகலதுமாகும். இது 10 பேர்ச் பரப்பளவானது. ( இவ்வாதனம் இல. 647/4, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறையில் அமைந்துள்ளது என அடையாளம் காணப்பட்டது.)

மேற்குறிப்பிடப்பட்ட இல. 3368 எனும் வரைபடத்தின் லொட் 7 ஆனது ( 10 அடி அகலம்) பாதை உரிமையையும் மற்றும் ஏனைய பாதை உரிமைகளையும் கொண்டுள்ளது.

இவ்வாதனம் சந்தன விக்கிரமசிங்ஹ என்பவர் கடப்பாடுடைய வராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

2021. 02.09ஆந் திகதி பி.ப. 1 .00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2019.09.12ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.09.25 ஆந் திகதிய "லக்பிம", "டெய்லி மிரர்" மற்றும் "தினக்குரல் " பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்1500 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% மற்றும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: " சிரேஷ்ட முகாமையாளர் , (வணிக அறவிடுதல் பிரிவு),ஹற்றன் நஷ னல் வங்கி பீ.எல்.சீ., இல. 479, டீ. பீ .ஜாயா மாவத்தை, கொழும்பு10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836, 011- 2661826.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும்
வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை, கண்டி.

தொலைபேசி இல.: 081- 2310595, 071- 8446374, 071-4962449.

1- 155

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

**தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ . பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் திரிமான்ன உயர் கல்வி நிறுவனம் எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனி வியாபாரத்தை நடாத்திச் செல்லும் மொனராகலையைச் சேர்ந்த அஜந்தா பத்திரன மற்றும் மொனராகலையைச் சேர்ந்த ஆரியசேன பத்திரன ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

இவ் ஆதனத்தை 2021.02.08 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்கு/வியாபாரத்திற்குப் பொருத்தமான சொத்து

மொனராகலை மாவட்டம், மொனராகலை பிரதேச செயலாளர் பிரிவு புத்தல வெதிரட்ட கோரளை முப்பன கிராமத்தில் இல. 131C பல்லருவ ( தற்போது 131C ஹொரொம்புவ) கிராம அலுவலர் பிரிவு மொனராகலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தரகொடமுகலான எனும் காணி நிலஅளவையாளர் நாயகத் தினால் 2017, மாச்சு மாதம் தயாரிக்கப்பட்ட 2018. 03.05 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட மேலதிக இல. 398 இ.கி.வ.

இல. 172 எனும் வரைபடத்தில் குறிக்கப்பட்ட மேலதிக இல.398 இல் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் இல. 3975 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும் , மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.

இது 14.82 பேர்ச்சஸ் ( 0.0375 ஹெக்டேயர் ) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.**- ஹுலங்தாவ சந்தியிலிருந்து வெல்லவாய பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பிரதான பாதையில் இடது பக்கத்தில் விபுலானந்த தமிழ் பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.04.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.04.11 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-விற்பனை தீர்க்கப் பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்);
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், மையப்படுத்தல் ( கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை,கொழும்பு-02. தொலைபேசி: 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 071-8446374, 071- 4962449
தொலைபேசி/தொலைநகல் : 081-2210595

1- 154

**அமான வங்கி பீஎல்சீ - ஓட்டமாவடி கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மொஹமட் இஸ்மாயில் அசனார் மற்றும் அசனார் மொஹமத்து இப்றாஹீம் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக அமானா வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவை-க்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில்

**2021.02.05ஆந் திகதி பி.ப. 3.15 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**சொத்து விபரம்.**- மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, கோரளைப்பற்று மேற்கு, பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 2, ஓட்டமாவடி கிராமத்தில் முன்னாள் தலைவர் ("Ex-chairman") பாதையில் அமைந்துள்ள பல்வது வயல் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅ-ளவையாளர் A.M. நஜுவுடீன் என்பவரினால் 2014.02.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட AMN/14/KPW/3697 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 19.18 பேர்ச்சுகள் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.**-ஓட்டமாவடி சுற்றுவட்டத்திலிருந்து ஜும்மாப் பள்ளி பாதையில் சுமார் 250 மீற்றர் தூரம் பள்ளிவா-சல் வரை வந்து வலதுபக்கமாகவுள்ள முன்னாள் தலைவர் ("Ex Chairman") பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர்கள் தூரம் சென்று மீண்டும் வலது பக்கமாகத் திரும்பி அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் எல்லையில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2019.12.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2019.12.20 ஆந் திகதிய "திவயின", "டேலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ, ஓட்டமாவடி கிளை, மாவடிச்சேனை, வாழைச்சேனை. ". தொலைபேசி: 065- 7756009.
அமானா வங்கி பீஎல்சீ, இல. 486, காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி: 011- 7756000.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374, 071- 4962449.

1- 153

---

### அமான வங்கி பீஎல்சீ -ஒட்டமாவடி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகூர் லெப்பை ஹைதர் அலி மற்றும் ஹைதர் அலி மொஹமட் முனாஸ் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக அமானா வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில்

**2021.02.05 ஆந் திகதி பி.ப. 2.45 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**சொத்து விபரம்**.- மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவு,பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில், கோரளைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹுதா வீதியில் ( Hudah Road) அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் K.A.E.K. திஸ்ஸ வீரசிங்ஹ என்பவரினால் 2014.06.18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 587/2014 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 15.46பேர்ச் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- வாழைச்சேனை சந்தியிலிருந்து திருகோணமலை வீதியில் சுமார் 1.1 கி.மீ. தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி ஹுதா பள்ளி வீதிக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2018.06.22 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.06.22 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி பீஎல்சி இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ, இல. 486, காலி வீதி,கொழும்பு 03.
தொலைபேசி: 011- 7756000.EXT. 2112.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374, 071- 4962449.

1- 152

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கந்தேகெதர அஸீஸ் மொஹொமட் ஹாரிஸ் என்பவர் கடப்பாடுடையவராக /ஈட்டாளராக நேஷன்ஸ் ட்டிரஸ்ட் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு மஹதெல்கே சஜானி கமீலியா பீரிஸ் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.11.15 ஆந் திகதிய இல. 1530 எனும் முறியின் மீது இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள உரிமைகள், ஆதனம் மற்றும் வளவுகள் மேற்கூறிய கந்தேகெதர அஸீஸ் மொஹொமட் ஹாரிஸ் என்பவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி வசதிகளை உரிய முறையில் மீள் செலுத்துவதற்கான பிணையாக நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம்.

*2021.02.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**ஆதனத்தின் விபரம்.-** மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், தெற்கு மாத்தளை மெதசியபத்து உக்குவெல பிரதேச சபை எல்லைக் குட்பட்ட, உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவு, உக்குவெல கிராம அலுவலர் பிரிவு, உக்குவெல கிராமத்தில் அமைந்துள்ள "உக்குவெல எஸ்டேட்" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் W.A. பிரேமரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 18/67 ஆம் இலக்க 2018.06.10 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 1, 2 மற்றும் லொட் 3 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும்.

இது 02 றூட், 20.28 பேர்ச் பரப்பளவானது. (லொட் 01- 01றூ.) (லொட் 2- 30 பேர்ச்), ( லொட் 03- 30.28பேர்ச்) மேலும் 12 அடி அகலமான பாதையை உபயோகிக்கும் உரிமையும் உண்டு.

**ஆதனத்தை வந்தடைதல்.-** மாத்தளை நகரத்திலிருந்து உக்குவெல கடைத்தெரு வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி தெமட்டகொல்ல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இடதுபக்கமாகத் திரும்பி கொங்கிறீட் மற்றும் மணற் பாதையில் சுமார் 600 மீற்றர் தூரம் சென்று மீண்டும் இடதுபக்கமாகவுள்ள மணற் பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகவுள்ள 10 அடி அகலமான மணற் பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள் முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500 ரூபா;
(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 2,000.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: "முகாமையாளர், சட்டப்பிரிவு, நேஷன்ஸ் வங்கி பீஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொபேசி இல. 0114218742.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 071- 8446374, 071- 4962449.

1- 151

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

### பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மற்றும் பதிவுப் பிரிவு, ஹெல்கொட எகொட கோரளை , ஹிரியால ஹத்பத்துவ, கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவு, இப்பாகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்பகல்ல இல. 445 கிராம அலுவலர் பிரிவில் தம்பகல்லயில் அமைந்துள்ள "பஹலமுகலான மற்றும் வத்துயாய" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.S.K. பரனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.12.25 ஆந் திகதிய 2014/150 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 01 ஏக்கர், 02 றூட், 23.5 பேர்ச் பரப்பளவானது.

இவ்வாதனம் J.S. டிரேடிங் எனும் பெயர் மகுடத்தின் கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சேனாநாயக்க அமரசிங்ஹ மொஹொட்டி அப்புஹாமிலாகே ஜயவங்ஷ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- குருநாகலிலிருந்து தம்புள்ளை பாதையில் சுமார் 2 கி.மீ. தூரம் முத்தெட்டுகல சந்தி வரை வந்து இடது பக்கமாகவுள்ள ஹிரிப்பிட்டிய பாதைக்குத் திரும்பி அப் பாதையில் சுமார் 18.4 கி.மீ. தூரம் சென்று ஹிரிப்பிட்டிய குறுக் குப் பாதை சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி வாரியபொல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 2.3 கி.மீ. தூரம் சென்று கனேவத்த வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி கெக்குலாவல பாதையில் சுமார் 5. கி.மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடது பக்கத்தில் தம்பகல்ல சந்தியில் அமைந்துள்ளது.

2021. 02.02ஆந் திகதி பி.ப. 3 .30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2019.04.18ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.05.06 ஆந் திகதிய "லக்பிம", "டெய்லி மிரர்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்1000 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் .

கொள்முதலில் மிகுதி 90% மற்றும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: " சிரேஷ்ட முகாமையாளர் , (கடன் அறவிடுதல் பிரிவு),ஹற்றன் நஷ னல் வங்கி பீ . எல். சீ., இல. 479,டீ.பீ .ஜாயா மாவத்தை, கொழும்பு10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும்
வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை, கண்டி.

தொலைபேசி இல.: 081- 2210595, 071- 8446374,
071-4962449.

1- 150

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ

## பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் தம்பெல்ல கமச்சிகே இசுரு இஷான் கடப்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு ஆர். பீ. கே. ராஜபக்சவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.07.30 ஆந் திகதியிடப்பட்ட 18 மற்றும் 2018.01.30 ஆந் திகதிய இல. 276 முறியின் மீது நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம்.

ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள 2021.02.09 ஆந் திகதி மு.ப. 9 .30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விபரம்**.- சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கொலன்ன பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் உல்லிடுவெவ கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 219 இல் உள் கொலன்ன பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கொலன்ன கோரளைவின் கொலன்ன கம்பட்டுவ DRO பிரிவின் உள்ள ஜயதுங்கண்ட மறுபெயர் ஜயதுங்கண்ட கிராமத்தில் உள்ள கொடக்லேதொல முக்கவத்த என அழைக்கப்படும் காணி தற்போது அப்பே ரொக் எஸ்டேட் காணித்துண்டு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகேயினாள் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009, சனவரி 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 06 இல் குறிக்கப்பட்ட 50 ஏக்கர் பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- தெனியாய விகாரை பாதையி லிருந்து செலோ கந்த பாதையில் 7 கி.மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் முடிவில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2020.02.28ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2020.03.12 ஆந் திகதிய "மவ்பிம", "டெய்லி மிரர்" மற்றும் "தினக்குரல் " பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்ட வுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்1500 ரூபா;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.

